முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1605

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.02.2024**, செவ்வாய்கிழமை

1. பார்போற்றும் மாதர்மம் தன்னை
   பரோபகாரமோடு இந்த பேருலகில் செய்து
   சீர்திருத்தம் உலகளாவிய வண்ணம்
   ஜெகமெல்லாம் சமத்துவம் பெருக வேண்டி
2. வேண்டியே அற்புதம் நடத்தவே
   வேலவன் என் அவதாரமாக வந்த
   தொண்டர்களின் படைபெருக்கி தேசமெங்கும்
   திருப்பங்கள் உருவாக அற்புதம் நடத்தும்
3. நடத்துகின்ற அரங்கனே குருராஜனே
   அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   யானுமே ஞான அறிவுரை ஆசி
   நாட்டிடுவேன் சோபகிருது சால் திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 08 ம் நாள், 20.02.2024, செவ்வாய்கிழமை)
4. ஒப்புகொண்டு உன்வழி உலகோர் வர
   உலகமாற்றம் இனிதே நடந்தேறும்
   தப்பில்லா அரங்கனுக்கு மகா சக்தியாய்
   தரணியில் சுப்ரமணியர் யானும் பேராற்றல் கூட்டி காத்து வருகின்றேன்
5. வருகவே ஆக்கைதனில் மாற்றம் செய்து
   வல்லமைபட அரங்கன் உம்மை காத்து நின்று
   காத்து நின்று உணவாக ஔஷதமாக
   கருணைமிக்க சொல்லாக செயலாக
6. ஒளிகாட்சியாக பல்வேறு வடிவில்
   உமக்கு என் ஆற்றல் வெளிப்பட்டு
   அற்புதம் அரங்கன் உன்னுள்ளே நடக்கும்
   ஆற்றல்பட மாற்றம் பல தந்து

7. அகிலத்தில் அரங்கன் தொண்டர்களுக்கும்
இந்த அற்புதத்தைக் காட்டி
உலகளாவிய வண்ணம் அற்புதம் நடக்க
உண்மைபட ஆறுமுகன் யான்
8. ஆற்றலாக இறங்கி அருளுகின்றேன்
அருளவே அரங்கன் நானே அரங்கனே யானாகும்
அகிலமெங்கும் மாற்றத்தை
அரங்கன் வழி யான் நடத்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—